# ஆளும் பாரி! வாழும் ஓரி! நாளும் காரி!



முத்தமிழும் முல்லையாய், மல்லிகையாய், ரோஜாவாய் மணக்கும் வகையில் எம்மொழிக்கும் இல்லாத இச்சிறப்புமிக்க தமிழ்மொழி சிறந்தோங்கும் தமிழ்நாட்டில் ஈகையில் சிறந்த வள்ளல்கள் அவ்வப்போது தோன்றிய வண்ணம் இருக்கின்றனர். வரலாற்றிலும் இன்றும் வாழ்கின்றனர்.

முற்கால வள்ளலில் சிறந்தவன் செம்பியன் என்றால் இந்த நூற்றாண்டின் வாழும் வள்ளலாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நாட்டை முதல்வராக ஆண்டு கொண்டிருப்பவர்தான் அண்ணன் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

தமிழினத்தின் மரபணுமாறாமல் வந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சாட்சி தான் ஈகையில் சிறந்த எம்முதல்வர் தான் கொடுத்து வரும் மகளிர் உரிமைத் தொகையை தேர்தலைக் காரணம் காட்டி மக்கள் விரோத சதிகாரக் கூட்டம் தடுத்து விடுமோ என்று முன்னெச்சரிக்கை உணர்வுடன் முன்கூட்டியே ரூ.3000 மற்றும் கோடைக் காலத்திற்கு குளிர் தரும் நிதியாக ரூ.2000 என்று 5000 ரூபாயை அள்ளித் தந்துள்ளார் அற்புத உள்ளம் கொண்ட அன்புணர்வுமிக்க ஆளுமையில் சிறந்த நம் முதல்வர்.

தாய்க்குலம் வாடினால் தமிழ்க்குலம் வாடிடும், குழந்தைகள் வாடுவர் ஏன் ஆடு, மாடு என அத்தனை உயிர்களும் வாடிடும் என்பதை அறிந்த அறிவில் சிறந்த நம் முதல்வர் வாரி வழங்கினார். பாராட்டாத மகளிர் இல்லை. போற்றாத குடும்பம் இல்லை.

பீகாரில் தேர்தல் நேரத்தில் ரூ.10,000 கொடுத்த பம்மாத்துப் பா.ஜ.கவினர் தமிழ்நாட்டு முதல்வர் தந்த 5000 ரூபாயை தேர்தலுக்காக கொடுத்தது என்றும் தோல்வியின் அச்சத்தால் கொடுத்துள்ளனர் என்றும் கோபத்தின் மற்றும் இயலாமையின் உச்சத்திற்குச் சென்று ஊளையிட்டுள்ளனர்.

இதுவரை கொடுக்காத கோடைக்கால நிதி ரூ.2000 கொடுத்தது ஏன் என்று எடப்பாடி கேட்டுள்ளார். கொடுப்பது முதல்வர், வாங்குவது மகளிர் இதில் ஏன் வயிற்றெரிச்சல் படுகிறார் எடப்பாடி? தோல்வி பயத்தில் தொடை நடுக்கம் எடுத்து விட்டது எடப்பாடியாருக்கு!

இன்று மட்டுமா கொடுக்கிறார் ஈகை வேந்தர் நம் முதல்வர்! கொரோனா காலத்தில் ஆட்சியில் முதல்வராக அமர்ந்தவுடன் மக்களுக்கு ரூ.4000 கொடுத்தார். முடிந்த பொங்கலுக்கு ரூ.3000 கொடுத்தார். தற்போது ரூ.5000 கொடுத்துள்ளார். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத் தொகையை ரூ.1000 லிருந்து உயர்த்தி ரூ.2000 தர இருப்பதாக அறிவித்துள்ளார். இன்றைக்கு எம்முதல்வரின் எண்ணப்படி இந்தியாவில் பத்து மாநிலங்களில் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் மனநிலை அறிந்து உதவுபவர்தான் நல்ல மக்கள் தலைவராக இருக்க முடியும். அதற்கு உதாரணம் தான் நம்முதல்வர். தமிழ் மரபில் இப்படி வாரி வழங்கும் கொடைத் தன்மை வழிவழியாக இருந்து வருகிறது.

முல்லைக்கொடி படர்வதற்கு இடம் இல்லாமல் இருப்பதை பார்க்கிறார் வள்ளல் பாரி. இரக்க மனம் கொண்ட மன்னரோ முல்லைக் கொடி எப்படியும் படர்ந்து விடும் என்பதைப் பற்றி சிந்திக்காமல், தயங்காமல் தான் பயணித்த தேரில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டுவிட்டு முல்லைக்கொடி படர்ந்திட தேரை அங்கேயே நிறுத்தி விட்டு கொடியையும் அதில் படர வழி வகுத்து விட்டு சென்றானாம் அந்தப் பாரி வள்ளலின் கொடைத் தன்மையையும் ஆளுமைத் திறனையும் கண்டு மூவேந்தர்கள் ஒன்று சேர்ந்து அவரை போர் தொடுத்து கொன்றனர். ஆனாலும் அவரது வள்ளல் தன்மையால் இன்றளவும் மக்களால் பாரிவேந்தர் போற்றப்படுகிறார்.

இதே போல் மழை வருவதற்கான அடையாளமாக மேகங்கள் திரண்டு வர இயற்கையின் நியதிப்படி மழை வரும் நேரம் தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து ஆஹா குளிரிலல்லவா மயில் சிரமப்படுகிறது என்று நினைத்து உடனே மயிலுக்கு குளிரின் தாக்கம் இருக்கக் கூடாதென்று போர்வையைக் கொண்டு போர்த்தினானாம் வள்ளல் பேகன். இப்படி வள்ளல்கள் பாரி மற்றும் பேகன் செயல்களைக் கண்டு இது என்ன முட்டாள் தனமான செயலாக இருக்கிறதே என்று இன்றைய தலைமுறையினர் பேசக் கூடும்.

இத்தகைய அந்த இரண்டு வள்ளல்களின் செயலையும் தமிழ் இலக்கியம் =கொடைமடம்+ என்று புகழ்கிறது. முல்லையாக இருந்தாலும் மயிலாக இருந்தாலும் அவைகளையும் உயிராக கருதி இப்படிப்பட்டச் செயல்களை தமிழினம் இன்றளவும் வள்ளல் தன்மைக்கு எடுத்துக்காட்டாக கூறிவருகிறது.



**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணி செயலாளர்*

அதேபோல் அண்ணன் குமணன் மன்னனாக இருந்து நல்லாட்சி தந்து தன்னை நாடி வருவோருக்கு வாரி வழங்கி வந்துள்ளான். இதில் பொறாமை கொண்ட அவனது தம்பி இளங்குமணன் மன்னராக அமர ஆசைப்பட்டு சூழ்ச்சி செய்து தனது அண்ணனை விரட்டிவிட்டு ஆட்சியில் அமர்கிறான். (எப்படி ஔரங்கசீப் தன் அண்ணனின் தலையை யானையை வைத்து மிதித்துக் கொன்று விட்டு ஆட்சியில் அமர்ந்தானோ அப்படி)

ஆனால் குமணனிடமிருந்த வள்ளல் தன்மை அவனது தம்பியிடம் இல்லை. நாடிச் சென்று பாடிடும் புலவர்களுக்கு எந்த பரிசும் தராததோடு அவர்களை இகழ்ந்தும் பேசுவானாம். இப்படிப் புலவர் பெருஞ்சித்தனார் இளங்குமணனால் இகழ்ந்து பேசப்பட காட்டில் ஏமாற்றத்துடன் நடந்து செல்கிறார். அப்போது அங்கே மன்னன் குமணனைப் பார்க்கிறார். குமணனிடம் நடந்ததைச் சொல்கிறார். குமணனோ அப்புலவரிடம் என் தம்பி என் தலையை யார் கொய்த்துக் கொண்டு வந்து கொடுத்தாலும் தகுந்த பணம் தருவதாக அறிவித்துள்ளான். எனவே புலவரே தங்களுக்கு தற்போது கொடுக்க என்னிடம் ஏதுமில்லை என் தலையை வெட்டிக் கொண்டு சென்று என் தம்பியிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றானாம். புலவரோ குமணனின் வள்ளல் தன்மையை அறிந்து மெய்சிலிர்த்து போய் நீ அல்லவோ மன்னன் என்று புகழ்ந்தானாம்.

இப்படி சங்ககாலத்தில் இருந்து தற்காலம் வரை ஈகையில் சிறந்தவர் பலரை ஈன்றெடுத்த மண் தமிழ் மண். அதற்கு மேலும் பல உதாரணங்களைத் தரலாம். வல்வில்ஓர், காரி, திருமுடிக்காரி, அதியமான், செம்பியன் என்று எழுதிக் கொண்டே போகலாம்.

நம்முடைய திராவிட இயக்கத் தலைவர்களிலும் வாரி வழங்கும் வள்ளல்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களில் குறிப்பாக தந்தை பெரியாரை நாம் குறிப்பிட்டுச் சொல்ல ஒரு சம்பவத்தைக் கூறிட வேண்டும். பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார். அதுவும் பெண் கல்வி அவசியம் தேவை என்றார்.

அந்தக் காலத்தில் ராஜாஜி முதல்வராக இருந்தபோது ஆறாயிரம் கல்விக் கூடங்களை இழுத்து மூடினார். அவருடைய நோக்கமெல்லாம் பிள்ளைகள் பெற்றோர் செய்த வேலையை செய்ய வேண்டும் என்பதே. அதாவது குலக்கல்வி திட்டம். அதை தந்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார். பின் ராஜாஜி பின்வாங்கினார்.

அந்த சமயத்தில் திருச்சியில் கல்லூரி அமைக்க வேண்டும் என்று விரும்பினார் தந்தை பெரியார். அதற்காக கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலத்தை தந்ததோடு ஐந்து லட்சம் நிதியையும் தந்தார். அப்போது ஐந்து லட்சம் என்றால் இப்போது ஐம்பது கோடிக்கு சமம். அந்த கல்லூரி கட்டப்பட்டது. தந்தை பெரியார் பெயரிலேயே அக்கல்லூரி தற்போதும் இருக்கிறது. இதில் பயின்றவர்கள் பல லட்சம்பேர் இருப்பார்கள். இது தந்தை பெரியாரின் கொடைத் தன்மைக்கு ஓர் உதாரணம்.

இன்று சென்னையில் உள்ள பெரியார் திடல் பல கோடி மதிப்பிலானது. தஞ்சை வல்லத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவியர் பலர் பொறியாளராக வந்துள்ளனர். இப்படி அவர் கல்விக்காக தந்தது மட்டும் எண்ணிக்கையில் அடங்காத நிதிகளாகும். இது நாம் சான்றுக்குத் தந்த ஒரு உதாரணம். இப்படி பலபல எழுதலாம். அதேபோல் அறிஞர் அண்ணா பேச்சில், எழுத்தில், அறிவில் தலைசிறந்து விளங்கியவர். அவர் ரூபாய்க்கு 1 படி அரிசி தர வேண்டும் என்று அறிவித்து நடைமுறைப் படுத்தினார். அவரது நோக்கம் உயர்வானது. அதேபோல் ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்றார். அதாவது தன் மாநிலத்தில் உள்ள மக்கள் முகத்தில் புன்னகையை மட்டும் பார்க்க விரும்பியவர். ஓலையிலான வீடுகளே இருக்கக் கூடாது என்று விரும்பினார். ஆனால் விரைவில் மரணித்தார். உயிரோடு ஆண்டிருந்தால் எத்தனையோ திட்டங்களைத் தந்திருப்பார்.

அண்ணாவின் அன்புத் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் அண்ணாவின் எண்ணத்தை நிறை வேற்றும் வண்ணம் குடிசையில்லா மாநிலமாக்க குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தி பலரை நல்ல வீடுகளில் வசிக்க வழிவகுத்தார். மனிதர்களால் மதிக்கப்படாதவர்கள் பிச்சைக்காரர்கள். அந்தப் பிச்சைக்கார ர்களையும் வாழ வைக்க மறுவாழ்வு மையத்தை ஏற்படுத்தி வாழ வைத்தார். இப்படி எத்தனையோ திட்டங்களைத் தந்தார். தலைவர் கலைஞர் அவர்களின் கொடைத் தன்மைக்கு மேலே குறிப்பிட்டச் சான்று ஒன்று ஆகும்.

தலைவர் கலைஞரின் அன்பு மகன் தமிழக முதல்வர் ஓயாத உழைப்பால் அயராத பணியால் இன்று கழகத் தலைவரான அவர் கொண்டு வந்த திட்டங்கள் அத்தனையும் மாணிக்கங்கள். இந்திய நாட்டில் மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைப் பார்த்து அமல்படுத்திய திட்டங்கள் எண்ணற்றவை.

ஒன்றிய அரசு விரும்பாவிட்டாலும் முதல்வர் தந்த சிறந்த திட்டங்களுக்காக சுமார் 65 விருதுகளை வழங்கியுள்ளது. நிதிகளை தர மறுத்து முடக்க நினைத்த போதும் தன் மக்களை முடங்கவிட மாட்டேன் என்று தந்துள்ள திட்டங்கள் அத்தனையும் தித்திக்கும் கற்கண்டு திட்டங்கள். மக்கள் நேரடியாக பயனடைகிறார்கள். அறிஞர் அண்ணா விரும்பியபடி அரிசித் திட்டத்தை விலையில்லா அரிசியாக வழங்கி உணவு கிடைக்காத மக்களே இல்லை என்று வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக இன்று ஆட்சி புரிந்து வருகிறார். முக்கனிச் சுவையும் முத்தமிழ் பெருமையும் அனைவரும் அறிய அற்புத ஆட்சி அதாவது கொடைவள்ளல் ஆட்சி தந்து வருகிறார்.

முதல்வரின் மகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாத்தாவிற்கும் தந்தைக்கும் சற்றும் சளைத்தவரல்லர் என்ற பெருமனம் கொண்டவராய் திகழ்கிறார். விளையாட்டுத் துறையில் சாதனை தமிழகம் நிகழ்த்திட வீரர் வீராங்கனைகளுக்கு நிதி மற்றும் அனைத்து உதவிகளையும் செய்து தருகிறார். அனைத்து சட்டமன்றத் தொகுதியிலும் அடிப்படை தேவையான விளையாட்டு அரங்கத்தை அமைத்து வருகிறார்.

அதனால் இளையோர் தடகளம் மட்டுமின்றி மூத்தோர் தடகளப் போட்டியிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. அடுத்து வரும் ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாடு வீரர் வீராங்கனையோ நிச்சயம் ஒரு பதக்கம் பெறுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதோடு முதல்வரின் அனைத்து திட்டங்களும் சரியாக மக்களுக்குச் சேர்ந்திடும் பணியையும் தூக்கம் தொலைத்து ஓய்வை மறந்து செய்வதோடு கழக வளர்ச்சிக்காக மாநாடுகள் நடத்துவது மற்றும் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

இப்படி எண்ணற்ற பணிகளை செய்வதால் மக்கள் நல்ல சுகமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். நிதி தரவில்லை என்றாலும் நெஞ்சூரம் தங்களிடம் இருக்கிறது. ஈர நெஞ்சமது ஈகை நெஞ்சமாக மாறியுள்ளதால் வள்ளல்களின் அதேபோல் மூவேந்தர்களின் திருவடிவமாக திகழ்ந்து திராவிட மாடல் நல்லாட்சியை நல்கி வருகின்றனர். தொடரட்டும் அவர்களின் வள்ளல் பணி! துணைநிற்போம் தூய நெஞ்சோடு! தூற்றுவோரை வேரறுப்போம்! போற்றுவோரை பாராட்டுவோம்!

---

முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்! அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில்

# மேல் அரசம்பட்டில் ரூ.173 கோடி மதிப்பீட்டில் அணைக் கட்டும் பணி!

## வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர், பிப். 26 –

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் மேல் அரசம்பட்டு கோயில் மலை ஆற்றின் குறுக்கே ரூ.173 கோடியில் புதிய (நீர்த்தேக்கம்) அணைக் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி காணொளி காட்சி வாயிலாக கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் திட்டத்தை துவக்கி வைக்கிறார். இதுகுறித்து வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சி காலம் தொட்டு சுதந்திர இந்தியாவில் ஏறக்குறைய 100 ஆண்டு காலமாக வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டும் என்று விவசாய பெருமக்கள், விவசாய தொழிலாளர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்த வண்ணம் இருந்த சூழ்நிலையில் கடந்த 2016 –ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் இந்நாள் முதலமைச்சர் அவர்களாலும் மற்றும் இந்நாள் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களாலும் நான் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு மக்களின் ஏகோபித்த ஆசியோடும், ஆதரவோடும் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் முதன் முதலில் அன்றைய அ.தி.மு.க. அரசிடம் மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டும் என எனது கன்னிப்பேச்சு உரையில் கோரிக்கை வைத்தேன்.

அன்றைய அ.தி.மு.க. அரசு, நான் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ. என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு அத்திட்டத்தை கிடப்பில் போட்டும், நீதிமன்ற வழக்கை காரணம் காட்டி கால தாமதம் செய்து வந்தார்கள்.

இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு கழகத்தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்னை இரண்டாவது முறையாக வேட்பாளராக்கி தேர்தல் களம் கண்டு தொகுதியின் அத்தனை நல் உள்ளங்களின் ஒட்டுமொத்த ஆதரவோடு சட்டமன்ற உறுப்பினராக தேர்வு பெற்று சட்டமன்ற அவைக்குள் சென்று கழகத்தலைவர் முதல்வர் அவர்களிடம் அணைக்கட்டே இல்லாத தொகுதிக்கு அணைக்கட்டு என பெயர் இருந்தாலும் அதனை போக்கும் வகையில் அணைக்கட்டு தொகுதி, மேல் அரசம்பட்டில் அணைக் கட்ட வேண்டும் என கோரிக்கை வைத்து வந்த நிலையில் பல்வேறு தடைகளை கடந்து தாயுள்ளத்தோடு நிதி நிலை அறிக்கையில் ரூ.173 கோடியில் அணைக்கட்டு மேல் அரசம்பட்டு கோயில் மலை ஆற்றின் குறுக்கே (நீர்த்தேக்கம்) அணை கட்டப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டு அணைக்கட்டு தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து பால் வார்த்த கழகத்தலைவர், முதல்வர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும், கழக வடக்கு மண்டல பொறுப்பாளர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ. வ. வேலுவுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்து, இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு காணொளி காட்சி வாயிலாக இன்று (26.02.2026 வியாழக்கிழமை) சென்னையில் அடிக்கல் நாட்டு விழா துவக்கி வைக்கும் அதே வேலையில் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி ஒடுக்கத்தூரில் மிக பிரமாண்ட தொடக்க விழா நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகு திக்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட வார்டு மற்றும் ஊர்க் கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவில் திரளாக கலந்துகொள்ள வேண்டுமாய் எனது சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

---

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்! தேதி மாற்றம்

**தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!**

பிப்ரவரி 27 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28-02-2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் **"கலைஞர் அரங்கத்தில்"** எனது தலைமையில்;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் - வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் என். மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ்.அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க.தனசெல்வம், பெ.சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ். சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன், பி.டி. செல்வகுமார், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.02.2026

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

---

## தி.மு.க மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

**தி.மு.க மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிக்கை!**

கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக்கூட்டம் வருகிற 26.02.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் **மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார்** முன்னிலையில் நடைபெற உள்ளது. கழக மாநிலத் துணைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: **கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் மாணவர் மன்றம், மாணவர் அணியின் அடுத்தகட்ட ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 23.02.2026

**இரா.ராஜீவ்காந்தி**
செயலாளர்,
கழக மாணவர் அணி

---

# கோவை மாநகராட்சி பட்ஜெட் கூட்டம்!

கோவை, பிப். 26 –


கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற பட்ஜெட் கூட்டம் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், துணை ஆணையாளர்கள் அ.சுல்தானா, த.குமரேசன், மண்டல குழுத் தலைவர்கள் வே. கதிர்வேல் (வடக்கு), இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), ர.தனலட்சுமி (தெற்கு), கே.ஏ. தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), மீனா லோகு (மத்தியம்), நிலைக்குழுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ (கணக்குகள்), மாலதி நாகராஜ் (கல்வி & பூங்கா), பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்), வி.பி.முபசீரா (வரிவிதிப்பு & நிதி), சாந்தி முருகன் (பணிகள்), சோமு (எ) சந்தோஷ் (நகரமைப்பு), நிலைக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குளித்தலை இளமுருகு
**பிப்ரவரி 26 (2000)**



**திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு "இளமுருகு பொற்செல்வி" என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.**

**1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு 'அண்ணா' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.**

**"கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்" என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

இன்று 26 ந் தேதி

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



*நாமக்கல், பிப். 26 -*

*நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (26.02.2026 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.நடராஜபதி தலைமை தாங்குகிறார்*

*கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வா கிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*கூட்டத்தில், மார்ச் 1ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா ஏற்பாடுகள் குறித்தும்,, 'வெல்வோம் தமிழ்ப்பெண்கள்' பரப்புரை கூட்டம் நடத்துவது தொடர்பான ஆலோசனை மற்றும் கழக வளர்ச்சி பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.*

*இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி அறிவித்துள்ளார்.*